Registered as a Newspaper

# உதயன்

செவ்வாய்க்கிழமை 15 நவம்பர் 2022 | ஐப்பசி 29 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை : ரூ.50





## பெண்ணிடமிருந்து சங்கிலி கொள்ளை

யாழ்ப்பாணம், நவ. 15
யாழ்ப்பாணம் கல்வி யங்காடு ஜி.பி.எஸ். 11

## பணம், நகை திருட்டு; சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 15
3 பவுண் தங்கச் சங்கிலி, ஒரு அலைபேசி மற்றும் 11

## கைதானார் ஹிருணிகா

கொழும்பு, நவ. 15
ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர உட்பட 15 பேர் கறுவாத்தோட்டம் 11

# வரிகளால் மக்களை வதைக்கும் 'பட்ஜெட்'!

### எதிர்க்கட்சிகள் ஓரணியில் கடும் போர்க்கொடி

கொழும்பு, நவம்பர் 15

**2023** ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க வால் நேற்று முன்வைக்கப்பட்டது. வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் நிவாரணங்களை எதிர்பார்த்திருந்த மக்களுக்கு இந்த 'பட்ஜெட்' பேரிடியாக விழுந்துள்ளது. 11



வரி விதிப்பால் மட்டும்

## ஒன்றரை ரில்லியன் ரூபாவை அடைய அரசு முயற்சியா?

*அநுரகுமார திஸநாயக்க கேள்வி*

கொழும்பு, நவ. 15
பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களுக்குப் பதிலாக, ஒன்றரை ரில்லியன் வரி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது என மக்கள் விடுதலை 11

## இராணுவக் குறைப்பையும் வலியுறுத்தியதா ஐ.எம்.எப்?

கொழும்பு, நவ. 15
சர்வதேச நாணய நிதியம், இலங்கையின் இராணுவச் சிப்பாய்களின் எண்ணிக்கை தொடர்பில் கரிசனைகளை வெளிப்படுத்தியதா? என்ற கேள்வி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேற்றைய வரவு - செலவுத்திட்ட உரையை அடுத்து எழுந்துள்ளது. 2023ஆம் ஆண்டு வரவு - 11

### வனங்களை உருவாக்க 50 மில்லியன் ஒதுக்கீடு

### விவசாயக் கிராமங்களுக்கு ரூ.250 மில்லியன் ஒதுக்கீடு

### ஒரு பீடிக்கு இனி வரி இரண்டு ரூபா

### தனியார் துறைக்கு காப்புறுதி நிதியம்!

### அரச சேவையை மறுசீரமைப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம்!

### கஞ்சா உற்பத்தியை ஆராய நிபுணர்குழு!

### கடவுச்சீட்டு, விஸா கட்டணம் அதிகரிப்பு!

### எரிபொருள்களுக்கு கூடுதலான வரிகள்

விலைகள் இன்னும் அதிகரிக்கும் அபாயம்

09

## பெரமுனவின் 4 பேர் சஜித்துடன் சங்கமம்!

கொழும்பு, நவ.15
சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், சஜித் பிரேமதாஸ 11

## கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் திடீர் இடமாற்றம்!

கிளிநொச்சி, நவ. 15
கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக இதுவரை கடமையாற்றிய மருத்துவர் ந.சரவணபவன் கொழும்பு சுகாதார அமைச்சின் செயலாளரால் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மாகாண சுகாதார 11

## காணி சுவீகரிப்புக்கு எதிராக இன்று ஆளுநர் அலுவலகத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 15
வடக்கு மாகாணத்தில் முப்படைகளின் தேவைக்கு காணிகள் சுவீகரிப்பதை எதிர்த்து வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக இன்று நண்பகல் போராட்டம் நடத்தப்படவுள்ளது. வடக்கு மாகாணத்தில் முப்படைகளின் தேவைக்காக காணி சுவீகரிப்பது தொடர்பாக பிரதேச செயலாளர்களுடன் ஆளுநர் இன்று கூட்டமொன்றை நடத்துகின்றார். இந்தக் கூட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வடக்கில் படைகளுக்காக காணி சுவீகரிக்க மேற்கொள்ளப்படும் அனைத்து 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41 கிலோ கஞ்சா குருநகரில் மீட்பு

## சந்தேகநபரும் கைது

யாழ்ப்பாணம், நவ. 15

சுமார் 41 கிலோ கஞ்சாவை இந்தியாவிலிருந்து கடத்தி வந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் குருநகர் கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் நேற்று திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது.

குறித்த கஞ்சாப் பொதிகளை கடத்திவரப் பயன்படுத்தப்பட்ட படகும் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டது.



சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த கடற்படையினர் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-27)

# சாரதி அனுமதி அட்டைகள் நேற்றுமுதல் விநியோகம்

கொழும்பு, நவ. 15

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவர்களுக்கு நிரந்தர சாரதி அனுமதி அட்டைகள் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகின்றது என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நிரந்தர சாரதி அனுமதிப்பத்திர அட்டைகள் தபால் மூலம் வழங்கப்படும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சுமார் 6 லட்சம் பேருக்கு சாரதி அனுமதிப்பத்திர அட்டைகள் வழங்கப்படவுள்ளன. இந்த விநியோகம் சில வாரங்களில் நிறைவடையும். சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்காக 5 லட்சம் அட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் 5 லட்சம் அட்டைகள் விரைவில் நாட்டுக்கு வரும் - என்றார்.

சாரதி அனுமதி அட்டைகள் இறக்குமதி செய்யப்படாததால், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக சாரதி உரிம அட்டைக்குப் பதிலாக தற்காலிக காகித உரிம அட்டையே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-14-இ)

# யூரியா இறக்கும் பணி ஆரம்பம்

கொழும்பு, நவ. 15

உலக வங்கியின் உதவியுடன் 22 ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா உரத்துடன் வந்தடைந்த கப்பலில் இருந்து உரத்தை இறக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் பணிப்புரைக்கு அமைய நேற்றுமுன்தினம் இரவு 8 மணி முதல் உரத்தை இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது என்று கொமர்ஷல் உர நிறுவனத்தின் தலைவர் ஜகத் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும் பெரும்போகத்துக்கு நெல் மற்றும் சோளப் பயிர்களுக்குத் தேவையான யூரியா உரத்தைக் கொள்வனவு செய்வதற்கு உலக வங்கி 105 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கீட்டைக் கடனாக வழங்கியது.

அதன் கீழ், 13 ஆயிரம் மெற்றிக்தொன் உரம் அடங்கிய கப்பல் அண்மையில் நாட்டை வந்தடைந்தது. அதன் தொடர்ச்சியாகவே 22 ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா உரம் அடங்கிய இரண்டாவது கப்பல் நேற்றுமுன்தினம் நாட்டை வந்தடைந்தது.

இதேவேளை, அரசாங்கத்தால் வழங்கப்படும் இயற்கை உரங்கள் முறையான தரங்களுக்கு உட்பட்டவையல்ல

என்று விவசாயிகள் குற்றச்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-14-இ)

# தென்கொரியாவில்

## ஆசிய ரக்பி தொடரில் பங்கேற்ற இலங்கையணித் தலைவி மாயம்

கொழும்பு, நவ. 15

தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய எழுவர் ரக்பி தொடரில் பங்கேற்பதற்காக சென்றிருந்த இலங்கை அணியின் தலைவி துலானி பல்லே கொண்டகே காணாமற்போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்கொரியாவின் இன்சியான் நகரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் பங்குபற்றியதன் பின்னர் அவர் காணாமற்போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் அணியின் முகாமையாளர் அந்நாட்டு ரக்பி சங்க அதிகாரிகள் ஊடாக பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டுக்கமைய அவரைத் தேடும் முயற்சிகளில் கொரிய நாட்டு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ச-இ)

# குவைத் எயார்லைன்ஸின் கொழும்பு சேவை ஆரம்பம்

கொழும்பு, நவ. 15

குவைத் எயார்லைன்ஸின் ஜசீரா எயார்வேஸ் கொழும்புக்கான விமான சேவையை மீண்டும் தொடங்கியுள்ளது.

ஜசீரா எயார்வேஸ் குவைத்துக்கும் கொழும்புக்கும் இடையில் வாரத்துக்கு மூன்று முறைகள் விமான சேவைகளை முன்னெடுக்கவுள்ளது.

இதேவேளை, சமீபத்திய வாரங்களில் பிரான்ஸ், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ரஷ்யாவிலிருந்து பல விமான நிறுவனங்கள் கொழும்புக்கான விமான சேவைகளை மீண்டும் தொடங்கியுள்ளன.

இந்தப் புதிய விமானங்கள் கொழும்பில் இருந்து 50க்கும் மேற்பட்ட இடங்களுக்கு இணைக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அத்துடன் கொழும்புக்கான மேலதிக விமான சேவைகள் மூலம் இலங்கையில் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும் எனவும் தெரிவித்தார். (ஓ-14-இ)

# மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

முல்லைத்தீவு, நவ. 15

மாவீரர் தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு போரில் உயிரிழந்த மாவீரர்கள் நினைவுகூரப்பட்டனர். தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-19)



# மகளின் நகைகளை அடகு வைத்து சூதாட்டம் செய்த தாய்க்கு மறியல்!

கொழும்பு, நவ. 15

மகளின் நகைகளை அடகு வைத்து 40 லட்சம் ரூபாவைப் பெற்று கசினோ சூதாட்டத்தில் ஈடுபட்ட தாயொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொரளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாயொருவர், தனது மகளின் திருமணத்துக்காக வைக்கப்பட்டிருந்த நகைகளைத் திருடி அடகு வைத்துள்ளார். தனது நகையை மீட்டுத் தருமாறு மகள் கேட்டும் தாயார் அதைத் தவிர்த்து வந்துள்ளார் என்று பொரளை பொலிஸ் நிலையத்தில் மகள் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கமைய பொரளை சகஸ்ரவில் வசிக்கும் 44 வயதான தாயை பொலிஸார் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்ட தாயை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் கடந்த சனிக்கிழமை முன்னிலைப்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஓ-14-இ)

# சீனாவுக்கு எதிரான போராட்டம் ஐ.தே.க.வுக்கு தொடர்பு இல்லையாம்

## கூறுகின்றார் ஐ.தே.க பொதுச்செயலாளர்

கொழும்பு, நவ. 15

இலங்கைக்கான கடனை மறுசீரமைக்குமாறு சீனாவை வலியுறுத்தி, கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்துக்கு முன்பாக எமது கட்சியின் சீதாவக்க பிரதேசசபை உறுப்பினர் சஷி ஹெட்டியாராச்சி நடத்திய போராட்டத்துக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் கட்சி இராஜதந்திரத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது. அத்துடன், அரசாங்கம் சீனாவுடனான கடன் விவகாரங்களை இராஜதந்திர உறவுகளின் மூலம் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு என்பது நிதி அமைச்சின் பிரச்சினையே தவிர பிரதேசசபை உறுப்பினரின் பிரச்சினை அல்ல.

ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தெரியாமல் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டமைக்கு கட்சி உறுப்பினருக்கு எதிராக கட்சி நிர்வாகசபை நடவடிக்கை எடுக்கும் - என்றார். (ஓ-14-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு விழிப்புணர்வு பேரணி யாழ்.நகரில்




**யாழ்ப்பாணம், நவ.15**
**சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருந்து யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் வரை விழிப்புணர்வுப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.**

நேற்றுக் காலை 7.30 மணியளவில் ஆரம்பித்த பேரணி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி ஊடாக வேம்படிச் சந்தியை அடைந்து பிரதான வீதி ஊடாக மாவட்டச் செயலகத்தை அடைந்தது.
மாவட்டச் செயலகத்தில் விழிப்புணர்வுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், மாவட்ட செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் பேரணியில் கலந்துகொண்டனர்.
சர்வதேச நீரிழிவு தினமான நேற்று மக்களிடையே நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது. (எ-20)




## அடிப்படை வசதிகள் கோரி
# ஜேர்மன் தொழிற்பயிற்சி மாணவர்கள் போராட்டம்!

கிளிநொச்சி, நவ. 15
கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியிலுள்ள ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் மலசலகூடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நீண்டகாலமாக சீர்செய்யப்படாமல் காணப்படுகின்றன எனத் தெரிவித்து தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்களால் நேற்று திங்கட்கிழமை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.
ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனத்திலிருந்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஏ-9 வீதிவரை கவனவீர்ப்புப் பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நிர்வாகம் சீர்செய்யப்பட வேண்டும், அடிப்படை வசதிகளை உடன் ஏற்படுத்தித் தரவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
இதுதொடர்பில் குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவிக்கையில்,
இந்த விடயங்கள் தொடர்பில் உரிய தரப்பினருடனும் அமைச்சுடனும் கலந்துரையாடியுள்ளோம். மிக விரைவில் தீர்வு வழங்கப்படும். சீர்செய்யப்படும்வரை வீடுகளிலிருந்து டிஜிட்டல் தொழில்நுட்பம் ஊடாக கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ச-113)

# கசிப்பு காய்ச்சும் இடம் முற்றுகை

சாவகச்சேரி, நவ. 15
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவி தெற்கு ஈச்சம்காடு மயானப் பகுதியில் இயங்கிவந்த கசிப்புக் காய்ச்சும் இடமொன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்றுகையிடப்பட்டது.
சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, கசிப்பு காய்ச்சியவர்கள் தப்பிச்சென்ற நிலையில் ஆயிரத்து 100 லீற்றர் கோடா, 58 லீற்றர் ஸ்பிரிட் மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்கள் ஆகியன மீட்கப்பட்டன.
இதேவேளை தப்பியோடிய கசிப்புக் காய்ச்சியோர் அன்றையதினம் மாலை அதேஇடத்தில் மீண்டும் கசிப்பு காய்ச்ச முற்பட்டுள்ளனர்.
அதையறிந்த கிராமத்துப் பெண்கள் மயானப் பகுதிக்குச் சென்று அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.
வாக்குவாதம் முற்றியதையடுத்து கிராமமக்கள் ஒன்றுகூடி பொலிஸாருக்குத் தகவல் வழங்கவே கசிப்புக் காய்ச்சியோர் அங்கிருந்து வெளியேறினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,27,9)

# நீதிமன்றில் திருட்டு; இருவருக்கு மறியல்!

மன்னார், நவ. 15
நீதிமன்றத்தில் திருடிய குற்றச்சாட்டில் கைதான இருவருக்கு விளக்கமறியல் பிறப்பிக்கப்பட்டது.
மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருளாக இருந்த முதிரை மரக்குற்றிகளைத் திருடிய குற்றச்சாட்டில் பொலிஸ் அலுவலரும் மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற ஓட்டோ சாரதியும் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் கைது செய்யப்பட்டனர்.
பொலிஸ் அலுவலரின் உதவியுடன் நீதிமன்றத்தில் காணப்பட்ட முதிரை மரக்குற்றிகளைத் திருடிச்சென்று பள்ளிமுனை கோந்தப்பிட்டியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைத்திருக்கின்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய பொலிஸ் அலுவலர், ஓட்டோ சாரதி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.
கைதுசெய்யப்பட்ட இருவரையும் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது, எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இருவரையும் விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-14,213)



மாவீரர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு முள்ளியவளை துயிலுமில்லத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கரைதுரைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். (ச-19)



# அங்குரார்ப்பணமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், நவ. 15
வடக்கு மாகாண அலுவலகப் பணியாளர்கள் சங்கத்தின் அங்குரார்ப்பணமும் புதிய நிர்வாகத்தெரிவும் சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் வடமாகாண அரச சேவை பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதி கலந்துகொண்டார். (ஒ-14)

# தனங்களப்பில் வெடிகுண்டு

சாவகச்சேரி, நவ. 15
தென்மராட்சி தெற்கு தனங்களப்புப் பகுதியில் வெடிக்காத நிலையில் வெடிகுண்டு ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவதானிக்கப்பட்டது.
தனங்களப்பு- கேரதீவு உப்பளம் அமைந்துள்ள பகுதியில் மேய்ச்சலுக்கு மாடுகளைக் கொண்டு சென்றவர் அந்தப் பகுதியில் வெடிகுண்டு காணப்பட்டதை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.
அதனையடுத்து பொலிஸார் அங்கு சென்று பார்வையிட்டு வெடிகுண்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பாதுகாப்பை ஏற்படுத்திச்சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14, 9)

# திலினி பிரியமாலி மீது மேலும் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 15
பல நிதி மோசடிக் குற்றச்சாட்டுகளில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி, வர்த்தகர் ஒருவரிடம் 40 மில்லியன் ரூபா நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று மேலுமொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.
அலைபேசி விற்பனையில் ஈடுபட்ட வர்த்தகர் ஒருவர், 40 மில்லியன் ரூபாவை திலினி பிரியமாலியுடனான வர்த்தகத்துக்கு வழங்கியுள்ளார்.
வர்த்தகரின் 40 மில்லியன் ரூபாவுக்கான டொலரை கடந்த மே மாதம் 9 ஆம் திகதி வழங்குவதாக திலினி பிரியமாலி உறுதியளித்துள்ளார்.
பல சந்தர்ப்பங்களாக டொலரைக் கோரி வர்த்தகர், திலினி பிரியமாலியைத் தொடர்புகொண்டபோதும் டொலர் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய், சேய் சேவை பெறுவதில் கண்டாவளையில் சிரமங்கள்!

*பிரதேச மக்கள் தெரிவிப்பு*

**கிளிநொச்சி, நவ.15**
**கண்டாவளைப் பிரதேச கர்ப்பவதிகள் தாய், சேய் சேவைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.**

சேவை நாடிச்செல்லும் கர்ப்பவதிகள் மற்றும் பொதுமக்கள் காக்க வைக்கப்படுவதுடன், அவர்களைப் பார்வையிடப்படாமல் திருப்பி அனுப்புவது போன்ற அசௌகரியங்களுக்கு அடிக்கடி ஆளாக வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் கள மருத்துவ மாதுக்களது தொழிற்சங்கமானது உரிய தரப்பினருக்கு முறையிட்டதை அடுத்து அண்மையில் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்திலிருந்து வந்திருந்த விசாரணைக்குழு ஆரம்பப் புலன் விசாரணையை மேற்கொண்டுள்ளது.

"வஞ்சம் தீர்க்கும் வகையில் உதவிச் சுகாதார மருத்துவ அதிகாரி நடந்து கொள்கின்றார்.

கர்ப்பவதிகளைப் பார்வையிடுவதற்கு மருத்துவ மாதுக்களுக்குத் தகுதி இல்லை என்று கூறித் தடுக்கின்றார். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரது உத்தரவின் பேரிலேயே மருத்துவ மாதுக்கள் கர்ப்பவதிகளைப் பரிசோதித்தனர் என்று எழுத்தில் தரவேண்டும் என்று அவர் வற்புறுத்துகின்றார்" என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத களச் சுகாதார மருத்துவ மாதுக்களது தொழிற்சங்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

மாவட்ட தாய் சேய் நல அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு அமைவாக தரவு அறிக்கைகளை அனுப்புவதற்காகக் கடந்த சனிக்கிழமை காலை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்குச் சென்ற தமது தொழிற்சங்க உறுப்பினர்களான மூன்று மருத்துவ மாதுக்களை 'இன்று கடமை இல்லாத போது ஏன் இங்கு வந்தீர்கள்?' எனக் கூறி அவர்களைத் திருப்பி அனுப்பி விட்டனர் என்றும் மருத்துவ மாதுக்களது தொழிற்சங்கம் தெரிவித்தது.

இவை தொடர்பில் கண்டாவளை உதவிச் சுகாதார மருத்துவ அதிகாரியைத் தொடர்புகொண்டு கேட்ட போது, "எனக்கும் எமது பணியாளர்களுக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரே சிலரைத் தூண்டிவிட்டுள்ளார்" என்று தெரிவித்தார்.

அதேவேளை, கண்டாவளை உதவி சுகாதார மருத்துவ அதிகாரிக்கும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் பல்வேறு தளங்களில் முன்னர் பகிரங்கமாக வெளிப்பட்டிருந்தன என்பது குறிப்பி டத்தக்கது. (எ-214)

# கோத்தாபய எம்மை ஏமாற்றிவிட்டார்



*டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு*

கொழும்பு, நவ.15
குடும்ப அரசியலை முன் நிறுத்தாது புதிய அரசியல் முறைமை ஒன்றை உருவாக்குவார் என்று நம்பித்தான் கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கினோம். ஆனால், அவர் எம் எல்லோரையும் ஏமாற்றிவிட்டார்.

இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
2019 ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குக் கடும் போராட்டம் நடத்தினோம் .அந்தப் போராட்டத்தின் விளைவாகத்தான் கோத்தாபய ராஜபக்சவை வேட்பாளராகத் தெரிவு செய்தோம். அவர் ராஜபக்ச குடும்ப அரசியலை நிலைநிறுத்தமாட்டார். அரசியல் முறைமை மாற்றம் ஒன்றைச் செய்வார் என்று நம்பினோம். அவர் ராஜபக்ச குடும்பம் அணியும் சால்வையைக்கூட அணிய மறுத்தார். இதனால் அவர் மீது பெரிய நம்பிக்கை ஒன்று இருந்தது எங்களுக்கு. ஆனால், அவர் இறுதியில் எல்லோரையும் ஏமாற்றிவிட்டார் - என்றார். (எ-22)

# பேஸ்புக் ஊடாக சிறுமி விற்பனை

*விளம்பரப்படுத்திய நபருக்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை*

கொழும்பு, நவ. 15
17 வயதுச் சிறுமி ஒருவரின் பேஸ்புக் கணக்கைத் திருடி, சிறுமியை விற்பனை செய்ய விளம்பரப்படுத்திய சந்தேகநபருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பண்டாரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் சிறுமியொருவர் சில தினங்களுக்கு முன்னர் தனது அலைபேசியைத் திருத்துவதற்காக, வீட்டுக்கு அருகில் வசிக்கும் அலைபேசி திருத்துநரிடம் கொடுத்துவிட்டு சில மணித்தியாலங்களின் பின்னர் அலைபேசியை வாங்கியுள்ளார்.

திருத்தப்பட்ட அலைபேசியை இயக்கிய போது, அலைபேசியில் இருந்த சிறுமியின் பேஸ்புக் கணக்கு மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பன நீக்கப்பட்டிருந்தன. அதனையடுத்து புதிய மின்னஞ்சல் முகவரி மற்றும் பேஸ்புக் கணக்கை அலைபேசி திருத்து நரிடம் கொடுத்து உருவாக்கியுள்ளார். 2 நாள்களுக்குப் பின்னர், பலர் சிறுமியை அலைபேசியில் அழைத்து, "நீங்கள் என்ன செய்கிறீர்கள்? பைத்தியக்காரத்தனமான விடயங்களைச் செய்யாதீர்" என்று பேசியுள்ளனர்.

அதைத் தொடர்ந்து சந்தேகமுற்று சிறுமியின் பேஸ்புக் கணக்கை சோதித்தபோது "காசுக்காக விற்பனை செய்பவர்" என விளம்பரம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்தது.

மேலும், சிறுமியின் பேஸ்புக் கணக்கைப் பின் தொடர்ந்தவர்கள் நிர்வாணப் புகைப்படங்கள் அடங்கிய விளம்பரத்தை சிறுமிக்கு அனுப்பியிருந்தனர். இந்த நிலையில் இது தொடர்பில் சிறுமி பண்டாரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கமைய அலைபேசி திருத்துநருக்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஒ-14,இ)



# அதிக ரயில் தடம்புரள்வுகள் இந்த ஆண்டில் பதிவாகின

கொழும்பு, நவ. 15
இலங்கையின் போக்குவரத்து வரலாற்றில் அதிகூடிய ரயில் தாமதங்கள் மற்றும் தடம்புரள்வுகள் இந்த ஆண்டில் பதிவாகியுள்ளன என்று ரயில் இயந்திர கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ரயில் தடங்கள், இயந்திரங்கள் மற்றும் பெட்டிகளைப் பராமரிக்கும் திணைக்களத்தின் செயலிழப்பே இந்த நிலைமைக்குக் காரணம் என்று ரயில் இயந்திர கட்டுப்பாட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.இ.யு. கொந்தசிங்க தெரிவித்துள்ளார். (ஒ-14,இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியம் இழுபறியாகி முடியும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்ப டக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் – மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அவருடன் அனுசரணையாக நடந்து கொள்ளவும்.

**மீனம்:** எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022

"கூட்டுப் பறவைகளின் கூக்குரலோடு வீழும் கானகத்தின் மரண ஓலம் மலைகளில் முட்டும் வானம் எட்டும் காதுக்குக் கேட்காது கடைசி மட்டும்.

— கவிஞர் இன்குலாப்"



## தீர்வா? திணிப்பா?

"தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இப்போதுள்ள சந்தர்ப்பத்தையாவது பயன்படுத்த வேண்டும். தேசியப் பிரச்சினைகள் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் அன்றும் இன்றும் நாம் ஒரே நிலைப்பாட்டியிலேயே இருக்கின்றோம்'' – இவ்வாறு திருவாய் மலர்ந்துள்ளார் ஆளும் பெரமுனவின் தலைவரும் முன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ச.

எதிர்வரும் சுதந்திர தினத்துக்குள் தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இதன் சாத்தியப்பாடுகள் மற்றும் சாதகத்தனங்கள் தொடர்பில் தேசிய அளவில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், மஹிந்த வெளிப்படுத்திய 'அன்றும் இன்றும் நாம் ஒரே நிலைப்பாட்டில்' என்பதான கருத்து இங்கே முக்கியத்துவம் மிக்கதாக அமைகின்றது.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர், இலங்கையில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்கும்பொருட்டு மேற்கொள்ளப்பட்ட அத்தனை முனைப்புக்களின்போதும் அதற்குத் தடைபோட்டது இதே மஹிந்தவின் தரப்பும் அவர்கள் வெளிப்படுத்திய இனவாத நஞ்சும்தான். இதனால்தான் ராஜபக்சக்கள் மீது நம்பிக்கையை முற்றிலும் இழந்தவர்களாக தமிழர்களும் அவர்களைச்சார்ந்த தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்களும் காணப்படுகின்றனர். இந்த நிலைமைக்கு முழுக்காரணமும் , பாத்திரவான்களும் மஹிந்தவும் – ராஜபக்சக்களும் – அவர்களின் சகாக்களும்தான்.

இப்படியொரு பின்னணியில் 'தமிழர்களின் தீர்வுக்கான சந்தர்ப்பம்' என்ற அழைப்பை இருவேறு சிந்தனைத் தளங்களில் வெளிப்படுத்த வேண்டியவர்களாக தமிழர்கள் உள்ளனர். ஒன்று, ஜனாதிபதி ரணில் விடுக்கும் தீர்வுக்கான அழைப்பில் மறை கரங்கள் ஏதும் திரைமறைவில் செயற்படுகின்றனவா? என்பது. தீர்வுக்கான அழைப்பின் பின்னால் திரைமறைவுக் கரங்கள் இருந்தால், அது இந்த முயற்சியை முற்றுமுழுதாக நீர்த்துப்போக வைக்கும் என்பதில் இரண்டாம் எண்ணப்பாட்டுக்கு இடமில்லை. இரண்டாவது, ஜெனிவா அமர்வுகளையும் சர்வதேச அரசியல் அரங்கையும் கருத்திற்கொண்டு வெளிப்படுத்தப்படும் ஒரு சகுனி ஆட்டமா? என்ற கேள்விக்கு விடையைத் தேடுதல். அவ்வாறில்லாமல் இது இதய சுத்தியுடனான அழைப்பு என்றால், சில வெளிப்படுத்தல்களை ரணில் நேர்மையாகவும் பட்டவர்த்தனமாகவும் மேற்கொள்ள வேண்டும்.

'வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்... வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்' என்று நடைபாதை வியாபாரி போல கூவிக்கொண்டு இருப்பதற்கு முன்னர், அத்தகைய வாய்ப்புக்களை வழங்குவது மிகப்பிரதானமானது அல்லவா? ஒரு வாய்ப்பை வழங்கினால்தானே அது பயன்படுத்தப்படுகின்றதா அல்லது உதாசீனம் செய்யப்படுகின்றதா என்பதை அறியலாம். ஆதலால், தமிழர்களுக்குத் தீர்வு என்று சொல்லிக்கொண்டிருக்கும் ரணில், தனது தீர்வுப் பொதியிலுள்ள அம்சங்களை முதலில் வெளிப்படுத்த வேண்டும். அந்த அம்சங்கள் வெளிப்படுத்தப்படும்போதுதான் ரணில் தருவது 'தமிழர்களுக்குத் தீர்வா?' அல்லது 'பேரினவாதத் திணிப்பா?' என்பது தெளிவாகும். அந்தத் தெளிவுதான், ரணிலின் அழைப்பு தீர்வுக்கானதா? அல்லது சந்தர்ப்ப அரசியலா? என்பதையும் புடம்போடும். முதுபெரும் அரசியல்வாதியும், உயர் ராஜதந்திரியுமான ரணிலுக்கு இதுவொன்றும் புரியாத விடயமல்ல. அது தெரிந்திருந்தும், தனது தீர்வுப் பொதியின் அம்சங்களை ரணில் வெளிப்படுத்தாதமைதான் இங்கே சிக்கலுக்குரியதும் சிந்திக்க வேண்டியதும்.




# 2023 பட்ஜெட்டால் ஏமாற்றமில்லை

## வஜிர நம்பிக்கை



**கொழும்பு, நவ. 15**

**ஜனாதிபதியால் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மக்களை ஏமாற்றுவதாக அமையாது.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

சிறிகொத்தவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து விடுவித்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வழிவகுக்கும். எதிர்கால சந்ததியினருக்கான சாதகமான முன்மொழிவு.

மக்களை ஏமாற்றுவதாக இந்த வரவு- செலவுத் திட்டம் அமையாது. நாட்டை பொருளாதார ரீதியாக விடுதலை செய்யும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 135 வாக்குகள் கிடைக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# வியட்நாமில் மீட்கப்பட்டோருக்கு புலம்பெயர் அமைப்பு உதவி

கொழும்பு, நவ. 15

வியட்நாம் கடற்பரப்பில் வைத்து உயிருக்குப் போராடிய நிலையில் மீட்கப்பட்ட இலங்கையர்களுக்கு சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றது.

300 க்கும் மேற்பட்ட தமிழ் புலம்பெயலாளர்கள் கனடாவுக்கு புகலிடம் கோரி சட்டவிரோதமாக படகொன்றில் கடந்த 8ஆம் திகதி பயணித்தனர். இதன்போது பேரவலத்தில் சிக்கிய நிலையில் வியட்நாட் கடற்பரப்பில் வைத்து மீட்புக்குழுவால் மீட்கப்பட்டனர்.



தற்போது அவர்கள் வியட்நாமிலுள்ள முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பினரால் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ச-இ)

நாளை 16.11.2022 புதன்கிழமை ஐப்பசி 30

சுபநேரம் : 04.37 - 06.07
ராகுகாலம்: 12.07 - 01.37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியிலுள்ள மாவீரர் துயிலுமில்லம் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் மக்களால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை துப்புரவாக்கப்பட்டது.

இதேவேளை, தமிழர் தாயகப்பகுதிகளிலுள்ள துயிலுமில்லங்கள் மாவீரர் தினத்தை முன்னிட்டு துப்புரவாக்கப்பட்டு தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-19)

# 28 ஆண்டுகளாக புனரமைப்பின்றி சாந்தசோலை கிரேசர் வீதி!

## உடன் செப்பனிடுமாறுமக்கள் கோரிக்கை

வவுனியா, நவ. 15

வவுனியா நொச்சிமோட்டை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சாந்த சோலை கிரேசர் வீதி குண்டும் குழியும் நிறைந்து வெள்ளம் தேங்கியுள்ளதால் வாகனங்கள் பயணிக்க முடியாது அடிக்கடி விபத்துக்கள் நேரிடுகின்றன என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், குறித்த வீதி கடந்த 28 வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் தற்போது மோசமாகச் சேதமடைந்து குண்டும் குழிகளும் நிறைந்து காணப்படுகின்றது. சாந்த சோலை பிரதான வீதி 'காப்பெற்' வீதியாக செப்பனிடப்பட்டுள்ளபோதும் குறித்த கிரேசர் வீதி செப்பனிடப்படவில்லை.



நொச்சிமோட்டை கிராமஅலுவலர் பிரிவிலுள்ள துவரங்குளம், பேயாடிகூளாங்குளம், மாணிக்கர்வளவு, தம்பனைச்சோலை, சாந்தசோலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பல கர்ப்பவதிகள் இந்த வீதியிலுள்ள தாய்சேய் நிலையத்துக்கு ஆபத்தின் மத்தியிலேயே சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர்.

இதுகுறித்து தமிழ் தெற்கு பிரதேசசபையின் அதிகாரிகளிடம் பல தடவைகள் முறையிட்டும் வீதி சீர்செய்யப்படவில்லை. எனவே, இந்த வீதியில் நேரிடும் விபத்துக்களை தவிர்க்க தற்காலிகமாகவேனும் கிரவல் இட்டு செப்பனிட்டுத் தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச)

# யழ்ப்பாணம் மாநகர சபை

# இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், சந்தைகள், சிற்றுண்டிச்சாலைகள், ஒலிபரப்புச் சேவைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2023 (01.01.2023 - 31.12.2023)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2023 ஆம் திகதி முதல் 31.12.2023 ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள்கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,150.00** (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 15.11.2022 - 29.11.2022
( மு.ப **9.00** - பி.ப.**3.00** மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 30.11.2022 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 30.11.2022 மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **30.11.2022 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

**இறைச்சிக்கடைகள், பல்பொருள் வாணிபக்கடைகள் குத்தகை-2023**

| இல | இறைச்சிக்கடை, பல்பொருள் வாணிபம் | கடை இல | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 234,410.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 54,592.86 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 194,854.48 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 288,997.50 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 189,200.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 91,631.10 |
| 7 | பண்ணை கோழியிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 909,651.60 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 110,550.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,067,660.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 1,080,640.00 |
| 11 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 170,160.10 |
| 12 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 342,100.00 |
| 13 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 459,600.90 |
| 14 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 385,605.00 |
| 15 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 396,495.00 |
| 16 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 668,074.77 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 749,181.90 |
| 18 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 603,789.45 |
| 19 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 176,000.00 |
| 20 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 418,000.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 873,500.10 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 417,660.10 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 313,500.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 495,000.00 |
| 25 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 288,200.00 |
| 26 | நாவாந்துறை கோழியிறைச்சிக் கடை | இல.10 | 5,000.00 | 481,855.00 |
| 27 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 69,527.34 |
| 28 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 696,245.00 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 717,323.20 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 492,470.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 582,661.20 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 577,610.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 550,192.50 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 401,401.00 |
| 35 | குருநகர் பன்றி இறைச்சிக்கடை | | 5,000.00 | 385,800.80 |
| 36 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 298,627.56 |
| 37 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 209,972.51 |
| 38 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 186,782.22 |
| 39 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 207,452.84 |
| 40 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.11 | 5,000.00 | 61,965.22 |
| 41 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.12 | 5,000.00 | 10,771.59 |

**சந்தை, துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் - குத்தகை - 2023**

| இல | துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், பொதுச்சந்தை | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 2,152,000.50 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 6,601,800.70 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 6,050,550.00 |
| 4 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 8,289,600.00 |
| 5 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 666,600.00 |
| 6 | அரியாலை மீன்சந்தை | 1,000.00 | 83,793.33 |
| 7 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 396,000.00 |
| 8 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 183,031.20 |
| 9 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாகவுள்ள வாகனத்தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 238,706.60 |
| 10 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 288,000.90 |
| 11 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | 1,000.00 | 12,607.31 |
| 12 | நீதிமன்ற துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 2,000.00 | 288,000.90 |

**விளம்பர ஒலிபரப்புச்சேவைகள் குத்தகைக்கு 2023.01.01. - 31.12.2025 (மூன்று வருடம்)**

| இல | ஒலிபரப்பு விபரம் | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 01 | நவீன சந்தை கட்டிடத்தொகுதி மேல்மாடி | 30,000.00 | **1,650,000.00** |
| 02 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல் | 10,000.00 | **550,000.00** |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
[illegible]
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
07 - 03 - 1929

இறப்பு
14 - 11 - 2022



## சின்னக்குட்டி பொன்னம்பலம்

தையிட்டியை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி பொன்னம்பலம் நேற்று (14.11.2022) திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னக்குட்டி நாகசம் தம்பதியரின் மகனும், பூரணத்தின் அன்புக் கணவரும், கௌரிபாலன் (ஜேர்மனி), குணபாலன் (ஜேர்மனி), சிவகௌரி, ஜெயகௌரி, சாந்தகௌரி (சுவிஸ்), வசந்தகௌரி (யா/கொக்குவில் இந்துக் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீகௌரி, றாஜீ, ஜெயகுமார் (நொதேன் சென்றல்), நகுலேஸ்வரன் (முருகன் புடைவயகம்), கஜேந்திரன், நந்தகுமார் (ஐங்கரன் சூ பலஸ்) ஆகியோரின் மாமனாரும் கௌசிகா, கௌதமன், சுவாதி, லக்சிகா, சர்மிகா, யுதிஸ்ரன், கார்த்திகா, சரணி, சந்தியா, ஜெனனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2022) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 9.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0774187791 (மருமகன்)

தகவல்: குடும்பத்தினர்.

### கிளிநொச்சியில்
# போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வுப் பேரணி!




கிளிநொச்சி, நவ. 15

தீவிரமாகப் பரவிவரும் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றிணைந்து 'இளைஞர்களின் எதிர்காலம் இன்றேவலையமைப்பு' எனும் பெயரில் அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த அமைப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

அதன்படி குறித்த அமைப்பு நாளை புதன்கிழமை கிளிநொச்சி மருத்துவமனையிலிருந்து கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை விழிப்புணர்வு சைக்கிள் பேரணி ஒன்றை முன்னெடுக்கவுள்ளது.

இந்தப் பேரணியில் அனைத்து பொதுஅமைப்புக்களையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச-113)

# மரண அறிவித்தல்



## அருட்சகோதரி றுவ்வினா சாமிநாதர் தி.கு

யாழ்ப்பாணம் வசாவிளானைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி றுவ்வினா சாமிநாதர் தி.கு (13.11.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (15.11.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி,
121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 47662) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 08 . 1934

மறைவு
11 . 11 . 2022



## புவனேஸ்வரி தேவராஜா

யாழ். கட்டப்பிராய் டச் வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா Brampton ஐ வதிவிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி தேவராஜா அவர்கள் 11.11.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற வைத்திலிங்கம், தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், செல்வத்துரை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வத்துரை தேவராஜா அவர்களின் அருமை மனைவியும், ராஜேஸ்வரி (ராஜி, Enfield- பிரித்தானியா), ராஜ்குமார் (குமார்- கனடா), மங்களேஸ்வரி (மங்களம்- ஜேர்மனி), ராஜேஸ்வரன் (ஈசன்- கனடா), வாசுகி (Mitchum- பிரித்தானியா) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற சொர்ணம்மா மற்றும் அன்னரெத்தினம், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி (தவமணி), தெய்வேந்திரம், பாலசுப்ரமணியம் (பாலா) மற்றும் ராஜலட்சுமி, பேரின்பநாயகம் (ராஜா-Iver, பிரித்தானியா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், மனோகரன், விமலா, பத்மகுணசீலன் (சிறி), சசிகலா, சாந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், பைரவி-Dan, ஆதவன்-Rhea, வருண், ஆரதி, கீர்த்தி, பாமினி-சுரேஷ், அருண்-அபிரா, கஜன், பிரகவி (கவி), நிரோஷன், டிலோஷன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், விஷ்ணு, நிவேதா, அமிரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 15.11.2022 கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

# INVITATION FOR BID 2022/04
## Regional Directorate of Health Service Jaffna.

01. The **Chairman, Regional Procurement Committee,** on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

02. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

04. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents and in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.

05. Interested bidders may obtain further information **from address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.

06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212227889, Fax:0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.

07. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

08. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.

09. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | | | From 15.11.2022 until 29.11.2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 22.11.2022 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 30.11.2022 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
| NP/04/41/2022/PSSP/W/13 | Improvement Work Stage (II) at Drug Store Health Village Pannai, Jaffna. | 8.73 | 125Days | C7 and C6 (Buildings) | 5,000.00 | 88,000.00 | Till 15.03.2023 |
| NP/04/41/2022/PSSP/W/22 | Improvement Work Stage (III) at Drug Store Health Village Pannai, Jaffna. | 5.78 | 110Days | C7 and C6 (Buildings) | 5,000.00 | 58,000.00 | Till 15.03.2023 |

10. "Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated ,09.10.2020 and 11.01.2020 respectively will also be adopted.

Chairman
Regional Procurement Committee
Regional Directorate of Health Service, Jaffna

(GT 38698 (2/6))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தராயர் வழிவந்த சித்தவைத்தியர் குணரத்தினம் முத்துபிள்ளை தம்பதிகள் பெற்றெடுத்த முத்துகள் அத்தனையும் சித்த வைத்தியரே!

22ஆவது நினைவஞ்சலி (15.11.2022)



டாக்டர் திருமதி
தெய்வானைப்பிள்ளை
பூலோகசுந்தரம்



டாக்டர் திருமதி
கந்தசாமி
சிவக்கொழுந்து



டாக்டர் குணரத்தினம்
செல்வத்துரை
(ஓய்வுபெற்ற அதிபர், பிரபல வைத்தியர்)



டாக்டர் திருமதி செல்வத்துரை
பொன்னம்மா
(வைத்தியபூபதி பாரம்பரிய வைத்தியர்)



டாக்டர் குணரத்தினம்
சங்கரப்பிள்ளை
(வைத்தியர்)



டாக்டர் குணரத்தினம்
திருச்செல்வம்
(வைத்தியர்)



Dr. பூலோகசுந்தரம்
கயிலநாதன் D.A.M.S.(CEY)
"சகஸ்ராபிஷேக வைத்தியசூரி"
முன்னாள் முகாமையாளர், பறாளை ஈஸ்வர விநாகர்
சுழிபுரம்.



டாக்டர் செல்வத்துரை
வரதரத்தினம்



டாக்டர் செல்வத்துரை
இராசரத்தினம்

### உயர்குருதி அழுக்கம்

இதயத் துடிப்பினால் ஏற்படும் உதைப்பு விசையினால் குருதி அனைத்து இழையங்களுக்கும் வழங்கப்படுகின்றது. அதே போல் குருதி சிறுகுழாய்கள் மூலம் இதயத்தை நோக்கியும் ஒரு அழுக்கம் ஏற்படுகின்றது. இவ்விரண்டு அழுக்கங்களையும் கொண்டு ஒருவரின் கை நாடிமூலம் குருதி அறிகிறோம்.

இதயத்தினால் கொடுக்கப்படும் அழுக்கம் 120mmHg குருதிச் சிறுகுழாய்களால் ஏற்படுத்தப்படும் அழுக்கம் 80mmHg 120/80mmHg. இந்த அளவுகளை உடையவர்கள் சுகதேகிகளாகக் கருதப்படுகிறார்கள். இதை விட சிறிய அளவில் மாற்றம் காணப்பட்டால் அது சாதாரணமாகவே கணிக்கப்படுகிறது. 140/90mmHg வரையான அளவாகக் கணிக்கப்படுகிறது. இவையாவிற்கும் உணவே காரணியாக அமைகின்றது.

உணவின் முக்கியத்துவம் பற்றி திருக்குறளில் மிக அழகாக கூறப்பட்டுள்ளது. யாதெனில்

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உயிர்க்கு"

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து ஊறுபாடு இல்லை உயிர்க்கு"

ஒருவர் தமது பசிக்கு அளவாகவும், உடல்நிலைக்கு, வயதிற்கு ஏற்றதாகவும் உணவு உண்பாராயின் எந்நோயும் அவரை அணுகாது. இதே கருத்தை நவீன மருத்துவ முறையும் எடுத்துரைக்கின்றது. புதிய போசாக்கு ஆய்வுகளின்படி பாக்கரின் அனுமானம் (Barker's hopothesis) குழந்தை கருவிலேயே போசாக்கிற்கு அமைவாகவே உருவாக்கப்படுகின்றது. (Intrauterine Foetal Programining) அதன்பலனாகவே 38, 40 வயதுகளின் பின்னர் ஒருவர் நீரிழிவு (மதுமோகம்), உயர்குருதி அழுக்கம் போன்ற நோய்க்குள்ளாகின்றார்கள் என நிரூபணமாக்கப்பட்டுள்ளது.

உணவின் மாறுபாட்டால் ஏற்படும் உயர்குருதி அழுக்கம் உணவினாலேயே பேணப்பட வேண்டும். எமது சித்த வைத்தியர்களால் "அதிரக்க்ஷார" எனக் குறிப்பிடப்பட்டு பித்த சம்பந்தத்தினாலேயே ஏற்படுகின்றது என விபரிக்கப்படுகின்றது. எமது உடலில் முத்தோக்ஷங்களாகிய வாத பித்த கபம் 1:1/2:1/4 என்ற நாடி அளவில் நின்று உடலை இயல்பான நிலையில் வைத்திருக்கின்றது.

எமது உடலில் பித்தம், இரத்தம் இரண்டுமே நீர், தீ ஆகிய பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டது. எனவே பித்த அதிகரிப்பை குறைப்பதற்கு நீர், தீ அதிகமான இனிப்பு, புளிப்பு, உப்பு என்பன உணவில் தவிர்த்தல் அல்லது மிகக் குறைத்தல் சிறந்தது.

ஐம்பூதங்கட்கும், அறுசுவைகட்கும், நெருங்கிய தொடர்பு உண்டு. ஐம்பூதங்களின் சேர்க்கையினால் அறுசுவைகள் உண்டா கின்றன. இச்சுவைகள் மிகுந்தாலும் குறைந்தாலும் வாத, பித்த, கபம் மாறுபடுகின்றன. இம்மாதிரியான மாறுபாட்டால் நோய்கள் உண்டாகின்றன. இந்தவகையில் இரத்த அழுத்தம் குறைவதற்குக் குடிநீர் வகைகள், கறிகள், வறுவல்கள் போன்றவற்றை உண்ண வேண்டும்.

### எமது நவீன வழ்க்கை முறையில்

தயாரித்த உணவுகளை பெற்றுக்கொள்ளல் (Fast Food Culture), நகரமயமாக்கல் (Urbanization), உடல் உழைப்பற்ற வாழ்க்கை முறை (Sedentary Life), உடல் பருமன் (Obesity) போன்றவை மூல காரணமாகின்றன.

ஒருவருக்கு குருதி அழுக்கம் அதிகரிக்கும்போது தலையின் பின்புறத்தில் நோ, தலையிடி, இருதய படபடப்பு, மார்புவலி, திடீர் மயக்கம் முதலியவை அடிக்கடி ஏற்படும் இவ்வாறு ஏற்பட்டால் மருத்துவர் உதவியை நாடுவதுடன் இரத்த அழுக்கத்தை பார்த்து அவற்றிற்கு ஏற்ப உணவுகளை மாற்றுதல் வேண்டும்.

தொடர்ச்சியாக குருதி அழுக்கம் அதிகரித்துக் காணப்படுபவர்கள் மாரடைப்பு, பாரிசவாதம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. அதுமட்டுமன்றி மக்களின் சராசரி ஆயுட்காலம் குறைவடைந்து வருகின்றது. இவற்றை சரியான போசாக்கு உணவுகள் உட்கொள்வதனால் தவிர்த்துக் கொள்ளலாம்.

நாள்தோறும் நாம் உண்ணும் உணவில் இனிப்பு, கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, உவர்ப்பு என அறுசுவைகளும் தனித் தனியே மாப்பொருள், புரதம், கொழுப்பு முதலியன கலந்த உணவுகளுடன் கலந்தபடி முறையே 60%, 30%, 15% என உட்கொள்ள வேண்டும் இவற்றுடன் விற்றமின்கள், கனிப் பொருட்கள் நீர் முதலியவற்றையும் உட்கொள்ள வேண்டும்.

### மருத்துவ குறிப்புகள்
### எமக்கு உற்ற துணை யார்?

எமக்கு உற்ற துணையாக இருப்பது யார் என்றவுடன் மயக்கம் ஏற்படும். ஒருவர் சொல்லுவார் தந்தை, தாய், மனைவி, உறவினர்கள், கடவுள் என்ற நீண்ட வரிசையில் ஒருவரை ஒருவர் சொல்லி விடலாம் என பீலீர் நினைப்பார் ஆனால் ஆன்மீக சிந்தனையில் எமது உடம்பு தான் எமக்கு உற்ற துணையாக நவீன கருத்தாகும். எமக்கு உடல் ஆரோக்கியம் சிறப்பால் வாழ்ந்தால் நாம் நீண்டகாலமாக உயிர்வாழமுடியும். இதனால் எமக்கு உற்றதுணை உடம்பாகும். உடம்பு உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் எமது உயிர் நீண்ட காலமாக உடம்பில் தங்கியிருக்கும்.

வாழ வைக்கும் வாழைக்காய் துவர்ப்புள்ளது இதை கரட் துருவுவது போல் துருவி தேங்காண் எண்ணெய் அல்லது தேன் கலந்து சாப்பிட்டால் நுரையீரல் சுத்திகரிக்கும்.

கத்தரிக்காய் குழந்தை பெற்ற தாய்க்கு முதல் சரக்கு அரைத்து இஞ்சி, மஞ்சள் சேர்த்துக் கூட்டாக செய்து சாப்பிட குடல் புண் தீரும். பாகற்காய் சக்கரை வியாதிகளுக்கு கலப்புச் சுவை தேவையைப் பூர்த்தி செய்து சக்கரைச் சத்தை மட்டுப்படுத்துகின்றது. பித்தத்தை சமன் செய்கிறது.

### அறிவுக் கனியாகும் வாழைக்கனி

மிக இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்கும் வாழைப்பழம் நம் உடலுக்கு நல்ல போஷணையைத் தரும் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றது.

### அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

அதிக விருப்பமான உணவு என்றாலும் சுகமாக்கும் மருந்து என்றாலும் விரும்பிய செயல் எதுவென்றாலும் அளவுக்கு மிகுதியாகப்போனால் அது அமிர்தமாக இருக்காது நஞ்சாக மாறிவிடும்.

### வல்லாரை உண்டால் வல்லாலை வெல்வோம்

வல்லாரை என்ற மூலிகையை உணவுடன் சேர்த்து உண்பதனால் ஞாபகசக்தி அதிகரிப்பதுடன் உடற் பலனும் அதிகரிக்கும் இதனால் வலிமையுள்ளவனை வெல்லலாம்.

### பெருங்காயம் இல்லா உணவும் பெரியோர் இல்லாத வீடும் ஆகாது

வீட்டில் பெரியோர் இருப்பது எவ்வளவு முக்கியமோ அதே போல் உணவில் பெருங்காயமும் கூடுதலாக சேர்க்க வேண்டும் வாய்வை அகற்றி ஜீரணத்தை கூட்டும்.

### சுக்கு போல் மருந்தில்லை சுப்பிரமணியம் போல் தெய்வமில்லை

கருணையுள்ளவனான சுப்பிரமணியம் கடவுள் எம்மை காப்பதுபோல் மருந்துகளில் சுக்கு இல்லாமல் செய்வதுமில்லை. நாளாந்தம் சுக்கு தேநீர் குடிப்பது நல்லது.

### இரத்த அழுத்தமும் சக்கரை வியாதியும்

இந்நோய்க்கு சிறந்த மருந்தாக வேப்பமரத்தில் குலுங்கும் வேப்பம் பூக்களை உதிரவிடாமல் கொத்து கொத்தாக பறித்து போதுமான உழுந்து சவ்வரிசி சேர்த்து வடகமாக போட்டு அபாரித்து சாப்பிடலாம் விரைவாக இரத்த அழுத்த நோய் சக்கரை வியாதி நோய்கள் தீரும்.

அன்புள்ளங்களே அமரர் பாரம்பரிய சித்த வைத்தியர் செல்வத்துரை அவர்களினால் செலவில்லாத மருத்துவக் குறிப்புகள் அடியேன் தங்களுக்கு அறியத்தருகிறேன் மற்றும் சகலவிதமான நோய்களையும் தீர்க்கக் கூடிய மருந்துகள் எம்மிடம் உள்ளது. முக்கியமான நாடி பார்ப்பதில் மேலே உள்ளவர்கள் எனக்கு கற்றுத்தந்த படியால் நாம் சுழிபுரத்தில் வாழ்ந்த போல் சுன்னாகத்திலும் மிகச் சிறப்பாக வைத்திய சேவை செய்து வருகிறேன் பிள்ளைச் செல்வங்கள் இல்லாதவர்கள் கூட எனது மருத்துவ சிகிச்சை மூலம் பலபேர் மிகவும் சந்தோசத்துடன் வாழ்கின்றார்கள்.


**Dr. செ.கிருபாரத்தினம்,**
**ஆயுள் வேத வைத்தியர்,**
**யா/ மயிலணி மகா வித்தியாலய**
**அபிவிருத்தி சங்கச் செயலாளர்**
**சுன்னாகம் NSB Bank வீதி,**
**உடையார் வளவு, சுன்னாகம்.**
**077 954 7589**

(CS 47628)(3/6)

---

# மரண அறிவித்தல்

பிறப்பு
11 . 12 . 1939



இறப்பு
12 . 11 . 2022

## திரு.கணபதிப்பிள்ளை இராசையா

யாழ்.கோப்பாய் மத்தி கட்டுப்பாளையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசையா அவர்கள் கடந்த (12.11.2022) சனிக்கிழமை கடந்த கோப்பாயில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,சிவனேஸ்வரி (நேசம்) அவர்களின் பாசமிகு கணவரும், செல்வராணி, பத்மாராணி, சிவனேஸ்வரன், பரமேஸ்வரன், ராஜேஸ்வரன், விக்னேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீதாஸ் (ஸ்ரீ), சிவகுமார் (அப்பன்), கிருஷாந்தி, ஹர்ஜினி, கிருத்திகா, பிரமினா ஆகியோரின் அன்பு மாமனாரும், மௌனிஷா, நதுஷா, ரிசன், திசா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், அபிஷேக், அபினேஷ், கிஷான், அபிஷா, ராகவி, சயந்தவி, விதேஷ், லக்ஷி ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், செல்வகனபராஜா, காலஞ்சென்ற வக்சலா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், பர்வதம், தங்கம்மா, பாக்கியம், வைத்திலிங்கம் மற்றும் பொன்னம்மா, நல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற நாகம்மா அவர்களின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (15.11.2022) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பின்னர் மு.ப 10.00 மணியளவில் கோப்பாய் வடக்கு கந்தன்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீதாஸ் ராணி - மகள் Mobile : +447512379748
பரமேஸ்வரன்(சிவா) - மகன் Mobile : +447539300264
பத்மா - மகள் Mobile : +447491669980
சிவனேஸ்வரன்(அப்பன்) - மகன் Mobile : +4530956997
ராஜன் - மகன் Mobile : +447574231742
வரன் - மகன் Mobile : +447500450266

தகவல்:
குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்

மலர்வு
31 . 12 . 1960



உதிர்வு
13 . 11 . 2022

## திருமதி ஜெயசேகரன் சந்திரகலா

யாழ்ப்பாணம், இணுவில் கிழக்கு, அங்களப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயசேகரன் சந்திரகலா நேற்றுமுன்தினம் (13.11.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயசேகரத்தின் மனைவியும், நிறஞ்சன் (சுவிஸ்), நிரோஜன், நிரோசனா ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜேந்தினியின் மாமியாரும், காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் அருந்தவராணி (சுவிஸ்), திருஞானசோதி (சுவிஸ்), சிவனேஸ்வரி (சுவிஸ்), ஜெயநந்தகுமார் (சுவிஸ்), சிவசக்தி (ஜேர்மன்), ஸ்ரீபாஸ்கரன் (கனடா), வரதலட்சுமி (கனடா), சுஜதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இணுவில் காரைகால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
அங்களப்பாய்.

(cs.47664) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வனங்களை...

நாட்டில் அழிவடைந்துவரும் வனப்பகுதியை மீளமைப்பதற்காகவும் புதிதாக உருவாக்குவதற்காகவும் 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தை நேற்றுச் சமர்ப்பித்தபோது அறிவித்தார் நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- பூகோளத்தின் வெப்பம் அதிகரித்துவரும் சூழலில் வனப்பரம்பலை அதிகரிக்க வேண்டிய தேவை தற்போது வலுவாக உணரப்பட்டுள்ளது. எனவே 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வன மீள் உருவாக்கத்தை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

2027ஆம் ஆண்டு ஆகும்போது இந்த வன உருவாக்கம் முழுமை பெறும். இதற்காக 50 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்கின்றேன்.

இதேவேளை காலநிலை மாற்றம் தொடர்பில் ஆய்வுகளை நடத்துவதற்காக பல்கலைக் கழகமொன்றை சர்வதேச உதவியைப் பெற்று அமைக்க வுள்ளோம். இந்த ஆரம்ப நடவடிக்கைகளுக்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது- என்றார். (ம)

### விவசாயக்...

கொழும்பு, நவ. 15

விவசாயிகளை தொழில் முயற்சியாளர்களாக மாற்றுவதற்கும், அதனூடாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்காகவும் நாடெங்கிலும் பத்து விவசாயக் கிராமங்களை அமைப்பதற்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தை நேற்று முன்வைத்து உரையாற்றுகையிலேயே நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்காக நாம் கடுமையாக உழைத்தாலும் 30 வீதமான உற்பத்திகள் முறையற்ற களஞ்சிய நடவடிக்கைகள் மற்றும் சீரற்ற போக்குவரத்துக் காரணமாக வீணாக இழக்கப்படுகின்றன.

ஆகையால் இந்த அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் குறைப்பதற்காகவும் ; தேவையான உட்கட்டமைப்பு நடவடிக்கைளை மேற்கொள்வதற்காகவும் 150 மில்லியன் ரூபா (விவசாயக் கிராமங்களுக்கு மேலதிகமாக) ஒதுக்கப்படுகின்றது - என்றார். (ம)

### ஒரு பீடிக்கு...

கொழும்பு, நவ. 15

ஒரு பீடிக்கு இரண்டு ரூபா வரி விதிக்கப்படும் என்று அறிவித்தார் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரம சிங்க. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பீடிப் பாவனையில் இருந்து மக்களைத் தூரமாக்குவதற்காகவும், பீடி தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவதற்காகவும் ஒரு பீடிக்கு இரண்டு ரூபா வீதம் வரி விதிக்கப்படும். இதைவிட மேலதிகமாக புகைபொருள்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் உரிமங்களைப் பெறுவதற்காக அறவிடப்படும் கட்டணங்களும் அதிகரிக்கப்படும் - என்றார். (ம)

### தனியார்...

கொழும்பு, நவ. 15

தனியார் துறை ஊழியர்களுக்கான காப்புறுதி நிதியமொன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அரச ஊழியர்களுக்கு அக்ரஹார காப்புறுதி சலுகைகள் வழங்கப்படும் நிலையிலேயே, தனியார் துறையினருக்கும் அத்தகைய காப்புறுதி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (ம)

### அரச சேவையை...

கொழும்பு, நவ. 15

அரச வருமானத்தில் பெருமளவு அரச ஊழியர்களுக்கே செலவு செய்யப்படுகின்றது. இதனால், அரச வளங்களை ஒதுக்கீடு செய்வது சவாலாக மாறியுள்ளது. எனவே அரச சேவைகள் தொடர்பில் மறுசீரமைப்பதற்கு தனியான ஆணைக்குழு விரைவில் அமைக்கப்படும் இவ்வாறு தெரிவித்தார் நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க.

தனது வரவு - செலவுத்திட்ட உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது ஒரு லட்சத்து 45 ஆயிரம் அரச ஊழியர்கள் பணி புரிகின்றனர். அவர்களின் சம்பளங்கள் மற்றும் இதர வேதனங்களுக்காக அரசாங்கத்தின் வருமானத்தில் பெருமளவு தொகை செலவிடப்படுகின்றது. இந்த அதீத செலவு நிலையினால் அபிவிருத்தி நோக்கங்களுக்கும் இதர அரச செலவுகளுக்கும் நிதியை ஒதுக்கீடு செய்வது சவாலாகவுள்ளது. எனவே இவை தொடர்பில் மீளாய்வையும் மறுசீரமைப்பையும் மேற்கொள்வதற்கு தனியான ஆணைக்குழு அமைக்கப்படும்- என்றார். (ம)

### கஞ்சா....

கொழும்பு, நவ. 15

கஞ்சா உற்பத்தி தொடர்பில் ஆராய்வதற்கு நிபுணர் குழு அமைக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைத்த வரவு - செலவுத்திட்ட உரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏற்றுமதியை மட்டும் கருத்தில்கொண்டு கஞ்சா உற்பத்தியை மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்பட வேண்டும். அதற்காக தனியான நிபுணர்குழுவொன்று அமைக்கப்படும்- என்றார்.

நாட்டின் வருவாயை அதிகரிப்பதற்காக கஞ்சா பயிரிடப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே அண்மைக்காலமாக வலியுறுத்தி வருகின்றார். இந்தப் பின்னணியிலேயே அது தொடர்பில் பரிசீலிக்க அரசாங்கம் தயாராகியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-ம)

### கடவுச்சீட்டு...

கொழும்பு, நவ. 15

கடவுச்சீட்டு, விசா மற்றும் ஏனைய அறவீடுகள் மீது குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் அறவிடப்படும் கட்டணங்களை அதிகரிப்பதென பாதீட்டில் முன்மொழியப்பட்டுள்ளது. 2023 ஆம் நிதியாண்டுக்கான பாதீடு நேற்று முன்வைக்கப்பட்டது. இதில் 'வரியல்லா வருமானம்' எனும் விடயப்பரப்புக்குள் மேற்படி கட்டண அதிகரிப்புக்கான யோசனை முன்மொழியப்பட்டுள்ளது.

'அரசிறை திரட்சிப்படுத்தல் செயன்முறையில் வரியல்லா வருவாயின் அதிகரிப்பும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆகையினால், கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்குநான் முன்மொழிகின்றேன். எனினும், 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் இம்முன்மொழிவு மூலம் திருத்தம் செய்யப்படாது.

அரசாங்க நிறுவனங்களினால் அறவிடப்படுகின்ற மற்றும் சேகரிக்கப்படுகின்ற உரிமத்தொகை, வாடகை மற்றும் ஏனைய வரியல்லா வருவாய்கள் பற்றி ஆராய்ந்து பொதுத்திறைசேரிக்கு பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு குழுவொன்றினை நியமிப்பதற்கு நான் மேலும் முன்மொழிகின்றேன்' என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ-ம-44)

### எரிபொருள்...

கொழும்பு, நவ. 15

பெற்றோல் உள்ளிட்ட எரிபொருள்களுக்குக் கூடுதலான வரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வரவு - செலவுத்திட்ட உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எரிபொருள்களுக்கு கூடுதலான வரிகளை விதிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. பெற்றோல், டீசல் மற்றும் கச்சா எண்ணெய் இவற்றுக்கே வரிகளை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இறக்குமதியின் போது இந்த கூடுதல் வரி அறவீடுகள் வசூலிக்கப்படும்- என்றார். இந்த கூடுதல் வரிவிதிப்பால் எரிபொருள்களின் விலைகள் விரைவில் எகிறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு வயதை அடைந்த அதிபர்களின் வெற்றிடத்துக்கு தகைமையுள்ள அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வடமாகாண கல்வித் திணைக்களத்தால் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மற்றும் கச்சாய் மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கும் தென்மராட்சிக் கல்வி வலயத்தால் வகை II தரத்தைச் சேர்ந்த எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேச வித்தியாலயம் மற்றும் வகை III தரத்தைச் சேர்ந்த நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், கோவிலாக்கண்டி மகாலக்ஸ்மி வித்தியாலயம், சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம், சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (ஓ-14-9)

## முல்லை சீரற்ற காலநிலை மக்களின் இயல்பு பாதிப்பு

முல்லைத்தீவு, நவ. 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்பிலுள்ள மருதமடுக்குளம், விசுவமடுக்குளம், உடையார்கட்டுக்குளம் ஆகியவை வான்பாய்கின்றன. இதனால் தாழ்நிலங்களில் வெள்ளநீர் புகுந்துள்ளது. வயல் நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்படும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்தநிலையில் கடந்த சனிக்கிழமை வீசிய கடும் காற்று காரணமாக புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தின் மீது பெரிய வேப்பமரம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளது. மரத்தை அகற்றும் நடவடிக்கையில் பிரதேசசபை ஊழியர்கள் ஈடுபட்டனர். (ச-19)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கிளி / நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை அதிபரும், கிளிநொச்சி விசேட (காணி) மத்தியஸ்த சபை உறுப்பினருமாகிய

திரு. ஆறுமுகம் பரதன் (J.P)

(BA, Dip. in Edu)

அவர்கள் கடந்த (04.10.2022) அன்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதி மன்றில் கௌரவ மாவட்ட நீதிபதியும், நீதவானுமாகிய திரு.செ. லெனின்குமார் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

Congratulations அவரை பாடசாலை சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம். Congratulations

வாழ்த்துவோர்:

பாடசாலை சமூகம் - நாச்சிக்குடா


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 01 . 1943



மறைவு 14 . 11 . 2022

## கிருஷ்ணசாமி பாலசுந்தரம்

(யாழ்.போதனா வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற ஊழியர்)

செம்பியன்பற்று தாளையடியை பிறப்பிடமாகவும், நல்லூர் முத்திரைச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி பாலசுந்தரம் 14.11.2022 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணசாமி அம்மாப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற இராசமணி அவர்களின் அன்புக் கணவனும் கௌரிராம்குமார் (German), பாலசுந்தரம் பழனிவேல், வத்சலா வரதராஜன் (London), பாலசுந்தரம் .பொன்கிருஷ்ணவேல் (German) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மயில்வாகனம் ராம்குமார் (German), கனகசபாபதி வரதராஜன் (London), அபிநயா பொன்கிருஷ்ணவேல் (German) ஆகியோரின் மாமனாரும் வர்ஜிதா, சாருஜன், பிரகதி, ஆதிக் ஆகியோரின் அப்பப்பாவும் சதுர்ஷன், கவிநயா, கவிக்ஷனா, திவ்யன், தனுஷாந், திவிசா ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல:- $4^1/_2$ ,யமுனாரி ஒழுங்கை
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
மகன் - பழனிவேல்
இராசமணி பல்பொருள் வாணிபம்
0778591764

# சுதந்திரக் கட்சியினர் சந்திரிகாவுடன் சந்திப்பு!

கொழும்பு, நவ. 15
சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் சிலர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

சஜித் தலைமையிலான சிலர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்கு நேரம் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் பின்னணியிலேயே சந்திரிகாவும் இந்தச் சந்திப்பில் ஈடுபட்டுள்ளார். இதனால், சுவ கட்சி அரசாங்கத்தை இலக்குவைத்த நகர்வாக இது இருக்கலாம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-ம)

# மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 01 . 1938



இறப்பு 11 . 11 . 2022

## சின்னத்துரை இராசரத்தினம்

(K.M.P. Mill - உரிமையாளர்).

யாழ். சுன்னாகம் மேற்கு, கொத்தியாவத்தையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசரத்தினம் கடந்த (11.11.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் தவமணி அவர்களின் அன்புக் கணவரும், பொன்னம்பலம் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், இராசம்மா, குணரத்தினம், சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுமதி (சுவிஸ்), கலைமதி (ஜேர்மனி), சுமணன் (K.M.P. Mill), கோமதி (லண்டன்), திலீபன் (ஆசிரியர் - கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன் (சுவிஸ்), நகுலேந்திரன் (ஜேர்மனி), சிவரூபி (ஆசிரியை -ஸ்கந்தவரோதயா கல்லூரி), தயாசோதி (லண்டன்), சிவறஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிறோஜன், நிசாங்கி, நிர்மலன், நிரூபமா, நிரூஜனா, அனிற்றா, அனிஷ், முகிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொத்தியாவத்தை,
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம். (cs 21834) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# கசிப்புடன் இரண்டு பெண்கள் கைது!

யாழ். நவ. 15
இளவாலை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் 21 லீற்றர் கசிப்புடன் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

27 மற்றும் 42 வயதுடைய பெண்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 21 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-23)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2023 ஆம் ஆண்டிற்கான 1வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், பொது மலசலகூடங்கள் என்பனவற்றை 2023.01.01ஆம் திகதி தொடக்கம் 2023.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 15.11.2022 - 28.11.2022 பி.ப 2.00 மணி வரை**
**கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 29.11.2022 பி.ப 1.30 மணி வரை**
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 29.11.2022 பி.ப 2.00 மணிக்கு**
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.**

| தொ இல | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,865,000.00 | |
| 2 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை - 02 | 750.00 | 7,500.00 | 373,350.00 | 250.00 |
| 3 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 4 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 197,230.00 | 250.00 |
| 5 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 68,250.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 52,605.00 | |
| 2 | மல்வம் மாட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 1,000.00 | 10,000.00 | 409,500.00 | 250.00 |
| 3 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 67,200.00 | |
| 4 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 60,500.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40,500.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2022.10.03 ஆம் திகதிய வலம்புரி, உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பார்வையிடலாம்.

க.தர்சுஷன்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.

(CR 38499) (3-6)

# மரண அறிவித்தல்

மலர்வு 24 . 06 . 1948



உதிர்வு 13 . 11 . 2022

## திரு.மயில்வாகனம் கணேசராசா

அரியாலையை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.மயில்வாகனம் கணேசராசா அவர்கள் கடந்த (13.11.2022) ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் (குட்டித்தம்பி மாஸ்டர்) ரோகிணியம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் அன்னபூரணியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பேரின்ப கலைவாணியின் ஆருயிர் கணவரும், கமலன், அபிராமி, அருந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜனா, விக்கினேசன், மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கனிக்கா, காசினி, ருத்ரேஸ் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான தேவராசா, வாமதேவா மற்றும் கமலாதேவி, இரத்தினேஸ்வரன், மேகலாதேவி, ஸ்ரீதேவா, கலாதேவி, மகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பத்மா, சபாரத்தினம், காலஞ்சென்ற, ஜீவா மற்றும் குகரத்தினம், வசந்தகுமாரி, திரிபுரச்சந்திரன், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் சரஸ்வதி, கோகுலவாணி, மகாலிங்கம், நவரத்தினலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.11.2022) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலை Ground floor இல் (591, காலி வீதி, கல்கிசை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளை தொடர்ந்து 5 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
075 7346365 - அருந்தி, 078 3011896 - மகேந்திரன்
இல.12 5/5, சார்ள்ஸ் பிளேஸ், தெஹிவளை.

(CR 7069) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிகளால்...

21ஆம் நூற்றாண்டின் நவீன உலகுக்கு ஏற்ப பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் இந்த பட்ஜெட் அமையும். அந்த நவீன உலகை நோக்கிய பணிகள் இந்த பட்ஜெட் மூலம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்து தனது வரவு - செலவுத்திட்ட உரையை ஆரம்பித்தார் ஜனாதிபதி.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில மாதங்களாக எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கையாலும் விடா முயற்சியாலும் நாம் பொருளாதாரத்தில் இருந்து மீண்டெழக்கூடிய நம்பிக்கை ஒளிக்கீற்று தற்போது தென்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. அதுவும், கடன் மறுசீரமைப்புப் பேச்சுக்களும் வெற்றிகரமாக அமையும் என்று நாம் நம்புகின்றோம்.

கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடியவாறு அமைந்தது. ரூபா தற்போது வலுவடைந்து வருகின்றது. இந்த நிலைமையை தொடர்ந்தும் வலுப்படுத்தி அடுத்த மூன்றாண்டுகளுக்குள் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது எமது எதிர்பார்ப்பாகும். நாட்டின் நீண்ட அபிவிருத்திக்கு காரணமாக இருப்பது பிரபல்யமான தீர்மானங்களா? அல்லது சரியான தீர்மானங்களா?

பல்வேறு சந்தர்ப்பங்களில் எமது நாட்டில் சரியான தீர்மானங்களுக்குப் பதிலாக பிரபல்யமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இதனால்தான் நிவாரணப் பொருளாதாரம் நாட்டில் குவிந்து கிடக்கின்றது. மக்கள் தாமாக முன்னேறுவதற்குப் பதிலாக நிவாரணங்களைப் பெறுவதற்குப் பழக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

'நிவாரணத் தவிர்ப்பு' என்ற மறைமுகச் சொல்லாடலுடன் ஆரம்பித்த இந்த நீண்ட வரவு - செலவுத்திட்டம், மக்களுக்கு எங்கும் நிவாரணங்களை வழங்குவதை உறுதி செய்யாதது மட்டுமன்றி, பொருளாதாரத்தில் மிகவும் நலிந்த நிலையில் இருக்கும் மக்களிடம் 'இருப்பதையும் வரிகளால் பிடுங்கும்' கொள்கையைக் கொண்டதாக அமைந்துள்ளது என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன்படி, பொருள்கள், சேவைகள் என்று அனைத்திலும் கூடுதல் வரிகளைத் திணித்து குறைந்த காலத்துக்குள் வரிகளால் அரச வருமானத்தைப் பலப்படுத்தும் நோக்கம் கொண்டதாகவே இந்த வரவு - செலவுத்திட்டம் அமைந்துள்ளது. இதன் விளைவாக நாட்டில் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் 'ஒரு சுழற்சி விலை அதிகரிப்பை' எதிர்கொள்ளலாம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-ம)

## இராணுவக்...

செலவுத்திட்ட உரையில், 18 வருட சேவையைப் பூர்த்திசெய்ய ஆயுதப் படையினர் (சிறப்பு வகை தவிர்ந்த) தாம் விரும்பினால் ஓய்வுபெற அனுமதிப்பதற்கு முன்மொழிகின்றேன். உற்பத்தித் திறன் வாய்ந்த பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களை இயலச்செய்யும் விதத்தில் தேவையான பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதையடுத்தே, சர்வதேச நாணய நிதியம் இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கை தொடர்பில் அதிருப்தி வெளிப்படுத்தியிருக்கலாம் என்றும் அதன் விளைவாகவே இந்த படைக்குறைப்பு நடவடிக்கைக்கு ரணில் முயற்சிகளை மேற்கொள்கின்றார் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம)

## ஒன்றரை...

முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றுமுன்வைக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஏதேனும் நிவாரணம் கிடைக்கப் பெறுமா என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கொண்டிருந்த எதிர்பார்ப்பு முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் பாதிக்கப்பட்ட மக்களை புறக்கணிக்கும் வகையில் காணப்படுகிறது.

பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களுக்கு குறைந்தப்பட்சமேனும் நிவாரணம் வழங்கும் எவ்வித பரிந்துரைகளும் வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

மாறாக வரி அதிகரிப்பை மாத்திரம் வரவு - செலவுத் திட்டம் பிரதான இலக்காகக் கொண்டுள்ளது. 2023ஆம் ஆண்டு வரி அதிகரிப்பின் ஊடாக மாத்திரம் ஒன்றரை ரில்லியன் ரூபா அரச வருமானத்தை ஈட்டிக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வரி அதிகரிப்பு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும். பொருளாதார ரீதியில் இருந்து நாட்டு மக்களை மீட்டெடுக்கும் நடைமுறைத் திட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை. மறுபுறம் இலாபம் பெறும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தி அரச வருமானத்தை குறுகிய காலத்தில் ஈட்டிக் கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. பயனற்ற வரவு செலவுத் திட்டம் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துவோம்- என்றார். (ம)

## காணி...

முயற்சிகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்துமே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (அ-ம-26)

## சுகாதார....

சேவைகள் பணிமனைக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக, கிளிநொச்சி பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திலீபன் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

காரணம் எதுவும் தெரிவிக்கப்படாமலேயே இந்தத் திடீர் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (ம-214)

## பெரமுனவுடன்...

தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைந்துள்ளனர்.

அநுர பிரியதர்சன யாப்பா, சந்திம வீரக்கொடி, சுதர்ஷினி பெர்ணாண்டோபுள்ளே மற்றும் ஜயரத்ன ஹேரத் ஆகியோரே இவ்வாறு சஜித் அணியுடன் சங்கமித்துள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலில் இவர்கள் நான்கு பேரும் பெரமுனவின் சின்னத்தின்கீழ் போட்டியிட்டு சபைக்கு தெரிவானவர்கள். எனினும், மக்கள் புரட்சி ஏற்பட்ட பிறகு சுயாதீனமாக செயற்படும் அறிவிப்பை விடுத்தனர். அநுரபிரியதர்சன யாப்பா தலைமையில் அவர்களின் சுயாதீன அணி இயங்கியது. இந்த நிலையிலேயே நேற்று அவர்கள் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைந்துள்ளனர்.

சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி செயற்படுகின்றது. அதேபோல கூட்டணியாக ஐக்கிய மக்கள் கூட்டணி செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

# காணி மோசடி வழக்கில் சட்டத்தரணிக்குப் பிணை

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணத்தில் போலி உறுதி மூலம் காணி மோசடி இடம்பெற்றமை தொடர்பான குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சட்டத்தரணியை நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்க யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் திருமதி நளினி சுபாஸ்கரன் நேற்றுக் கட்டளையிட்டார்.

சந்தேகநபராக குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணியின் மருத்துவ நலன் கருதியும் அவர் காணி மோசடியின் உண்மையை வெளிக்கொணர முன்னெடுக்கப்படும் விசாரணை நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார் என்பதையும் உறுதியளிப்பதாக முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தை பரிசீலித்த பின்னர் நீதிமன்று பிணை அனுமதியை வழங்கியது.

இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட 9 சந்தேக நபர்களும் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் சார்பான பிணை விண்ணப்பத்தை ஆராய்ந்து வரும் 21ஆம் திகதி கட்டளை வழங்கப்படும் என்று தவணையிட்ட மன்று அன்றுவரை சந்தேக நபர்கள் 9 பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இந்த நிலையில் சட்டத்தரணி சார்பில் நேற்று நகர்த்தல் பத்திரத்தை முன்வைத்து ஆதரித்த சட்டத்தரணி, கலாநிதி குமாரவடிவேல் குருபரன் பிணை விண்ணப்பத்தை முன்வைத்து மேலதிக காரணங்களை மன்றில் சமர்ப்பித்தார்.

'சட்டத்தரணி சமூக நோயினால் பாதிக்கப்பட்டவர். அவரது சிகிச்சை தொடர்பான மருத்துவச் சான்றிதழ்கள் மன்றின் கவனத்துக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. அவர் எந்த வகையிலும் இந்த வழக்கின் விசாரணைகளுக்கு இடையூறாகவோ தடையாகவோ ஒருபோதும் செயற்படமாட்டார். சட்டத்தரணி என்ற வகையில் அவர் இந்த மோசடி தொடர்பான உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்ட ஒத்துழைப்பு வழங்குவார் என்பதை அவர் சார்பில் உறுதிபட மன்றிடம் முன்வைக்கின்றோம். அவர் பிணையில் உள்ள காலப்பகுதியில் நீதி பரிபாலனத்திலேயோ பொலிஸ் விசாரணைகளிலோ தலையீடு செய்யமாட்டார் என்ற அடிப்படையிலேயே பொலிஸாரின் விண்ணப்பங்களும் அமைந்துள்ளதும் சுட்டிக்காட்டத்தக்கது. இத்தகைய காரணங்களின் அடிப்படையில் அவரை பிணையில் விடுவிப்பதற்கான கட்டளையை ஆக்குமாறு கோருகின்றோம்' என்று சட்டத்தரணி சமர்ப்பணம் செய்தார்.

சந்தேகநபர் சார்பான சமர்ப்பணத்தை ஆராய்ந்த மன்று நிபந்தனையுடனான பிணையில் செல்ல அனுமதியளித்தது. (அ-ம-26)

## பெண்ணிடமிருந்து...

ஒழுங்கையில் சைக்கிளில் பயணித்த பெண்ணிடம் ஒன்றரைப்பவுண் தங்கச் சங்கிலி கொள்ளையிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே பெண்ணை வீதியில் மறித்து அவர் அணிந்திருந்த சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். நேற்றுத் திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். இதுதொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-26)

## பணம்....

20 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் வவுனியாவைச் சேர்ந்த சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி இந்தத் திருட்டு இடம்பெற்றது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போதே மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியாவைச் சேர்ந்த இந்த சந்தேகநபர் கோப்பாயில் தங்கியிருந்து வேலைசெய்து வருகின்றார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-26)

## கைதானார்...

சட்டம், ஒழுங்கு மீறல் உட்பட மேலும் சில குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெண்கள் மீதான வன்முறைகளுக்கு கண்டனம் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி நேற்று வீதிப் பேரணியையும், விழிப்புணர்வு வீதி நாடகத்தையும் முன்னெடுத்தது. கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஆரம்பமான பேரணி, ஐ.நா. அலுவலகம் வரை சென்ற பின்னர் அங்கு வீதி நாடகம் நடத்தப்பட்டது. இதற்கு பொலிஸார் இடையூறு விளைவித்தனர்.

அதன்பின்னர் ஜனாதிபதியின் வதிவிடம் நோக்கி மகளிர் அணி செல்ல முற்பட்டபோது, பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதன்போது வீதி நாடகத்தில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார். இதனால் பதற்ற நிலை உருவானது. ஹிருணிகா உள்ளிட்ட குழுவினர் கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையம் நோக்கிச்சென்றனர். அங்கு கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இந்நிலையிலேயே ஹிருணிகா உள்ளிட்ட 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனுக்கு மேலும் இராணுவ உதவிகள்

## அமெரிக்கா தாராளம்

கீவ், நவ. 15
ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை வழங்கி வரும் அமெரிக்கா, மேலும் 400 மில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளை வழங்கியுள்ளது.
அதிநவீன வான்பாதுகாப்பு அமைப்பு, ரஷ்யாவுக்கு எதிரான தனது பதில் தாக்குதலில் உக்ரைன் வெற்றிகரமாகப் பயன்படுத்திவரும் ஹிமார்ஸ் எனப்படும் அதீத சக்திகொண்ட ரொக்கெட் அமைப்பு உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்கள் இந்த இராணுவ உதவித் தொகுப்பில் வழங்கப்பட்டுள்ளன.
இதனிடையே உக்ரைனுக்கு வழங்குவதற்காக தென்கொரியாவிடமிருந்து சுமார் ஒரு லட்சம் ஹொவிட்சர் பீரங்கிக் குண்டுகளை அமெரிக்க வாங்க இருப்பதாகவும், இது தொடர்பாக அமெரிக்கா - தென்கொரியா அரசுகள் சிலகாலமாக பேச்சில் ஈடுபட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது. (ம)



# கெர்சன் நகரத்தை மீட்டது உக்ரைன்!

## ரஷ்யாவுக்குப் பின்னடைவு

மொஸ்கோ, நவ. 15
ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்பட்டிருந்த உக்ரைனின் கெர்சன் நகரம் மீண்டும் உக்ரைன் படைகளால் மீட்கப்பட்டுள்ளது. இதை 'அசாதாரண வெற்றி' என்று அமெரிக்காவின் ஜனாதிபதி மாளிகையான வெள்ளை மாளிகையும், 'வரலாற்று நாள்' என்று உக்ரைன் ஜனாதிபதி மாளிகையும் குறிப்பிட்டுள்ளன.
உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி மாதத்தின் இறுதியில் ரஷ்யா போர் தொடுத்தது. உக்ரைன் - கீவ் நகர்வரை வெகு வேகமாக முன்னேறிய ரஷ்யப் படைகள், பின்னர் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளின் ஆயுத உதவியுடன் உக்ரைன் கொடுத்த பதிலடியால் பின்வாங்கியது. இதனிடையே, போர் மூலம் தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்ட உக்ரைனின் லுஹான்ஸ்க், டோனெட்ஸ்க், கெர்சன், ஜபோரிஜியா ஆகிய நகரங்களை தங்கள் நாட்டுடன் ரஷ்யா இணைத்துக்கொண்டது.
இந்த நிலையில், உக்ரைனின் கெர்சன் பகுதியில் உக்ரைன் படைகள் ஆதிக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து, அங்கிருந்து ரஷ்யப் படைகளைத் திரும்புமாறு ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார். ரஷ்யப் படைகள் விலகியதைத் தொடர்ந்து கெர்சன் மீண்டும் உக்ரைனின் பிடிக்குள் வந்துள்ளது.
கெர்சன் பகுதியை உக்ரைன் மீட்டதைத் தொடர்ந்து தெருக்களில் உக்ரைன் கொடி ஏற்றியும், அந்த நாட்டு தேசியப் பாடலை இசைத்தும் மக்கள் தங்கள் கொண்டாட்டத்தை வெளிப்படுத்தினர்.
இதுவரை உக்ரைனிடமிருந்து ரஷ்யாவால் பறிக்கப்பட்ட ஒரே தலைநகரம் கெர்சனாக இருந்தது.
இந்த நிலையில், அதனை உக்ரைன் மீட்டமை, ரஷ்யாவுக்கு மிகப்பெரிய பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது. (ம)

## வீட்டுத்திட்டம் இடைநிறுத்தம்

# தற்காலிக கொட்டில்களில் மழைக்குள் மக்கள் அவதி

**முல்லைத்தீவு, நவ. 15**
**புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டபோதும் மீதிப்பணம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் தற்காலிக கொட்டகைகளில் பருவமழைக்கு பெரும் இன்னல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என பாதிக்கப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட பொருளாதாரம் நலிந்த சுமார் ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு மைத்திரிபால ஆட்சிக்காலத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது.
ஆயினும் ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து மீதிப்பணம் இடைநிறுத்தப்பட்டதால் வெறும் வீட்டின் அத்திபாரம் மாத்திரமே அமைக்கப்பட்ட நிலையில் அரைகுறையாகக் கட்டப்பட்டுள்ளது.
இதனால் தற்காலிக கொட்டில்களிலேயே மழை வெள்ளத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறோம்.
இதுதொடர்பில் பல்வேறு தரப்பினருக்கும் சுட்டிக்காட்டியபோதும் எவரும் எமது இன்னல்களைக் கண்டுகொள்ளவில்லை.
எனவே உரிய தரப்பினர் முன்வந்து எமது அவலநிலையை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ச-19)

# மாணவர்கள் தவறான பாதையில் செல்வதைத் தடுத்து நிறுத்துங்கள்!

## பாடசாலைச் சமூகத்தினரிடம் வலயக்கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 15
மாணவர்கள் தவறான பாதையில் தவறான திசையில் செல்வதற்கான வாய்ப்புக்கள் தற்போது எமது சமூகத்தில் உருவாகியுள்ளன. அவற்றிலிருந்து அவர்களை மீட்டெடுத்து ஆளுமைமிக்க மாணவர்களாக மாற்றுவது பாடசாலைச் சமூகத்தின் கைகளிலேயே உள்ளது.
கடந்த சனிக்கிழமை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் அலுவலகத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தெரிவித்தார்.
அவர் மேலும் உரையாற்றுகையில்,
மாணவர்களுக்கு இணைப்பாடவிதானச் செயற்பாடு கட்டாயம் தேவை. இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பொழுது மாணவர்களின் மனநிலை நிச்சயமாக மாற்றமடையும்.
இன்றைக்கு வடக்கு மாகாணத்தில் இளம் சந்ததியினர் ஆபத்து நிறைந்த பாதையில் செல்லத் தூண்டப்படுகின்றனர். அவர்கள் சரியான பாதையில் செல்ல பாடசாலைச் சமூகமே வழிகாட்ட வேண்டும். சமூக உணர்வுகள், பொறுப்புக்கள், கடமைகள், உரிமைகள் ஆகியவற்றை மாணவர்கள் மத்தியில் விதைக்கவேண்டும். அவர்கள் குடிமைப் பண்புகளில் தேறினாலே மிகப்பெரிய வெற்றியாளராக உருவாகுவார்கள். அதற்கு இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் முக்கியமானவை.
தென்மராட்சியில் மாணவர்கள் முன்னைய காலங்களில் யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றார்கள் ஆனால், இப்போது அது மாறி தென்மராட்சியிலும் சாதனைகளை நிகழ்த்தி தமது பிரதேசத்துக்கு பெருமை சேர்த்து வருகின்றனர். இது வரவேற்கத்தக்க விடயமாகும் - என்றார். (ச-159)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், நவ. 15
வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் கல்லூரியின் பொது மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
கல்லூரியின் அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வலிகாமம் கல்வி வலயத்தின் பணிப்பாளர் ரவிச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ச-27)





# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வுச் செயலமர்வு

கிளிநொச்சி, நவ. 15
கிளிநொச்சி நகர றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி தெற்கு வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பற்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த 120 வரையான ஆசிரியர்கள் கலந்துகொண்ட செயலமர்வில் வளவாளர்களாக பேராதனைப் பல்கலைக்கழக பல்மருத்துவ பீட இறுதி வருட மாணவர்களான உஷாங்கன், திவாகரன் ஆகியோர் கருத்துக்களை முன்வைத்து விளக்கமளித்தனர். (ஒ-14-214)

Clerk தேவை
யாழ்.நகரப்பகுதியில் இயங்கும் சட்ட நிறுவனம் ஒன்றிற்கு
தமிழ் தட்டச்சில் தேர்ச்சிபெற்ற ஒரு பெண் Clerk தேவை.
0773563857

பணிப்பெண் தேவை
தங்கிநின்று வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
077 375 3503


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org